


தி.மு.க. பொறியாளர் அணி உறுப்பினர் சேர்க்கை மற்றும் நிர்வாகிகள் தேர்வு முறையை கழகத் தலைவர் தொடங்கி வைத்தார். தி.மு.க. பொறியாளர் அணி தனது உறுப்பினர் சேர்க்கை மற்றும் பகுதி / நகர / ஒன்றிய / பேரூர் கழக நிர்வாகிகள் தேர்வினை தமிழ்நாடெங்கும் தொடங்கி உள்ளது. மாநிலப் பொறியாளர் அணி தங்களது அணியில் பொறுப்புக்கு விண்ணப்பித்திட QR Code வசதியுடன் கூடிய இணையப் பக்கத்தை வெளியிட்டுள்ளது. அந்த விண்ணப்பப் படிவத்துடன் கூடிய உறுப்பினர் சேர்க்கையை கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அறிவாலயத்தில் முறைப்படி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா உடன் இருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 1.10.2024 அன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 97வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அடையாறு, சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் திரைப் பயணம் மற்றும் வாழ்க்கை வரலாற்றை பற்றி விளக்கிடும் வகையில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கவிப்பேரரசு வைரமுத்து, சிவாஜி கணேசன் அவர்களின் மகன்கள் ராம்குமார் மற்றும் பிரபு குடும்பத்தினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் – நெடுஞ்சாலை ஆணையப் பணிகளின் முன்னேற்றம்!

# புதுடெல்லியில் ஆய்வுக் கூட்டம்: அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

## ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி தலைமை!

புதுடெல்லி, அக்.4 -

தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக, ஒன்றிய நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின்கட்கரி தலைமையில் புதுடெல்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பங்கு பெற்று ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் தேசிய நெடுஞ்சாலை பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக, ஒன்றிய நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின்கட்கரி தலைமையில், ஒன்றிய நெடுஞ்சாலைகள் துறை இணை அமைச்சர் அஜய் தம்தா, ஒன்றிய தகவல் ஒலி பரப்புத்துறை மற்றும் மீன் வளம், கால்நடைபால்வளத் துறை இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் முன்னிலையில், புதுடெல்லியில் 30.09.2024 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு அரசின் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பங்குப்பெற்று, தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சுங்கச்சாவடிகளில் கட்டண விலக்களிப்பது மற்றும் தமிழ்நாட்டிற்கு தேவையான புதிய திட்டப் பணிகளான;

1. கிளாம்பாக்கம் முதல் செங்கல்பட்டு வரை மற்றும் மதுரவாயல் முதல் சென்னை வெளிவட்டச் சாலை வரை உயர்மட்டச் சாலை அமைத்தல்.

2. செங்கல்பட்டு முதல் உளுந்தூர்பேட்டை வரை, எட்டு (8) வழித்தடமாக தரம் உயர்த்துதல்.

3. திருவாரூர் புறவழிச் சாலை அமைத்தல்.

4. கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரை, நான்கு வழித்தடமாக மேம்படுத்துதல்.

5. விக்கிரவாண்டி - கும்பகோணம் - தஞ்சாவூர் நான்கு வழித்தடமாக்கும் பணியினை விரைவு படுத்துதல்.

6. திருவாரூர் இரயில்வே மேம்பாலம் மறுகட்டுமானம் செய்தல்.

7. திருவண்ணாமலை மற்றும் பல்லடம் புறவழிச் சாலை அமைத்தல்.

8. வள்ளியூர் - திருச்செந்தூர் சாலை, கொள்ளேகால் - ஹானூர் சாலை, மேட்டுப்பாளையம் - பவானி சாலை, பவானி - கரூர் சாலை ஆகிய நான்கு சாலைகளையும் தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்துதல்.

9.திருச்சி (பால்பண்ணை) முதல் துவாக்குடி வரை சாலையை மேம்படுத்துதல்.

10. கோயம்புத்தூர் புறவழிச்சாலையை ஆறு வழிச்சாலையாக மேம்படுத்துதல்.

11. தாம்பரம் - மதுரவாயல் - மாதவரம் புறவழிச் சாலையில் (சென்னை புறவழிச்சாலை) விடுபட்ட இணைப்புகள் / வசதிகளை வழங்குதல்.

ஆகிய தேசிய நெடுஞ்சாலை பணிகளை வழங்கிட கோரிக்கைகளை அளித்து வலியுறுத்தினார். தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் தேசிய நெடுஞ்சாலைப் பணிகளின் முன்னேற்றத்திற்கு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு அளித்து வரும் ஒத்துழைப்பு குறித்து உரையாற்றினார்.

தொடக்கத்தில், 13.09.2024 அன்று திருச்சிக்கு வருகை தந்த ஒன்றிய அமைச்சருக்கு, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் மூலம் இந்திய அரசின் நிதியுதவியுடன் சாலை உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முதலிடத்தில் உள்ளது என்று பாராட்டியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ஒன்றிய அமைச்சர், தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளை பாராட்டியதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். மேலும், ஒன்றிய அமைச்சர், சில திட்டங்களில் நிலம் கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதால் திட்டங்கள் முடிக்கப்படுவதில் தாமதம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில், நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட மாநிலத்தில் செயல்படுத்தப்படும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் தொடர்பான இடர்பாடுகள் குறித்து, சம்பந்தப்பட்ட துறைகளுடன் விரிவான ஆய்வுக் கூட்டத்தை நடத்துமாறு, தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தியதால், அவருடைய வழிகாட்டுதலின்படி, தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களில் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதற்காக சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் தொடர்புடைய ராணுவம், வருவாய்த்துறை, தமிழ்நாடு மின்சாரவாரியம் (TNEB), நீர்வளத்துறை (WRD), வனத்துறை (Forest), மாவட்ட ஆட்சியர்கள், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) / தேசிய நெடுஞ்சாலை(NH) அதிகாரிகளுடன் 23.09.2024 அன்று சென்னை தலைமைச் செயலக பழைய கூட்டரங்கில் (Old Conference Hall) ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, சில இடர்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

மேலும், இக்கூட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைத்துறைத் திட்டங்களில் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதற்கும், தமிழ்நாட்டின் உள்கட்டமைப்புத் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், தமிழ்நாடு அரசு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் நடைபெறும் NHAI மற்றும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டப் பணிகள் அனைத்தும் தொடர் கூட்டங்கள் நடத்தி இடர்ப்பாடுகளை சரிசெய்து பணிகள் விரைவாக நடைபெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

அமைச்சர் எ.வவேலுவின் உரையை தொடர்ந்து, ஒன்றிய நெடுஞ்சாலை மற்றும் போக்கு வரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்கரி அனைத்து திட்டங்களையும், ஒன்றன்பின் ஒன்றாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் சார்பாக, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத்துறை ஆணையாளர் சுஞ்சோங்கம் ஜாதக், சிறு, தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை தனி அலுவலர் (டெக்னிக்கல்) இரா.சந்திரசேகர், தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர் மு.பன்னீர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருவெண்ணெய்நல்லூர் பேரூர் கலைஞர் நூற்றாண்டு விழா கல்லூரி சாலையை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.மாவட்ட ஆட்சியர் சி.பழனி, மாவட்ட செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், தயா இளந்திரையன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், துணைத் தலைவர் ஜோதி, ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



குமாரபாளையம் வடக்கு நகர 2வது வார்டு கழக அலுவலகத்தை நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் திறந்து வைத்தார். அலுவலக திறப்பு விழா குமாரபாளையம் நகர்மன்ற தலைவரும், குமாரபாளையம் வடக்கு நகர கழக பொறுப்பாளருமான டி.விஜயகண்ணன் தலைமையில், நகர் மன்ற உறுப்பினர் கிருஷ்ணவேணி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தொடர்ந்து இலவச மருத்துவ முகாமையும் மாவட்ட கழக செயலாளர் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் ஒ.ஆர்.செல்வராஜ், நகர் மன்ற துணை தலைவர் வெங்கடேஷ், பள்ளிபாளையம் வடக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் நாச்சிமுத்து, குமாரபாளையம் வடக்கு நகர கழக பொறுப்புக்குழு உறுப்பினர்கள் ராஜ்குமார், பன்னீர்செல்வம், ஜேம்ஸ், கந்தசாமி, ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவர் ராஜ், அயலக அணி துணை அமைப்பாளர் அசோக்குமார், மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ராதிகா, கயல்விழி, செல்வி, நகர, வார்டு கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள் புஷ்பா, சுமதி, வேல்முருகன், கோவிந்தராஜன், தர்மராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### முதல்வரின் இலட்சிய இலக்கினை அடைய

# சுற்றுலாத் துறையின் பங்களிப்பை முதன்மையாக்குவோம்!

## அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் அழைப்பு!

சென்னை, அக். 4 -

சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில் 1.10.2024 அன்று சுற்று லாத் துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் பிரிவுகள், கட்டமைப்பு வசதிகள், செயல்பாடுகள் குறித்து உயர் அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் சுற்றுலாத்துறை குறித்து தெரிவித்ததாவது,

நாட்டின் மொத்த உற்பத்தியில் 12 சதவீத பங்களிப்பினை சுற்றுலாத்துறை கொண்டுள்ளது. சுற்றுலாத் துறை பொழுதுபோக்கு சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, ஆன்மீக சுற்றுலா, பண்பாட்டு சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா என பல்வேறு வகைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த அனைத்து வகைகளி லும் தமிழ்நாட்டில் சிறப்பான வாய்ப்புகள் உள்ளதால் உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் வருகையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது. வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகையில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கின்றது.

தமிழ்நாட்டில் 1,000 ஆண்டுகளுக்கு பழமையான 800 க்கும் மேற்பட்ட கோவில்களும், இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் 46,000 க்கும் மேற்பட்ட கோவில்களும் ஆன்மீக சுற்றுலாவிற்கு முக்கிய பங்களிப்பை கொண்டுள்ளன. பல நூற்றாண்டு பழமையான கிறிஸ்துவ தேவாலயங்கள், இஸ்லாமிய மசூதிகள் அனைத்து மதத்தினரும் ஆன்மீக சுற்றுலா மேற்கொள்ள வழிவகுக்கின்றன.

மதுரை அழகர் திருவிழா, பழனி தைப்பூசத்திருவிழா, குலசை தசரா திருவிழா, திருச்செந்தூர் சூரசம்கார திருவிழா, வேளாங்கண்ணி மாதாகோவில் திருவிழா, நாகூர் தர்கா திருவிழாக்கள் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகளை ஈர்த்து வருகின்றன.

தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பு குறைந்த செலவில் அதிநவீன, தரமான, சிறப்பான மருத்துவத்தை அளித்து வருவதால் மருத்துவச் சுற்றுலாவில் இந்தியாவில் முதலாவது மாநிலமாக திகழ்கின்றது.

தற்போது சுற்றுலா பயணிகள் சுற்றுலா செல்லும் இடங்களில் நீங்காத அனுபவங்களை அளிக்கும் மலையேறுதல், மலைப்பகுதிகளில் தங்குதல், நீர்சறுக்கு, அலைச்சறுக்கு மேற்கொள்ளுதல் உள்ளிட்ட புதிய அனுபங்களை மேற்கொள்ள விரும்புகின்றார்கள். இவை தற்போது வளர்ச்சியடைந்து வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாவை தொழிலாக அங்கீகரிக்கும் வகையில் சுற்றுலா கொள்கையை வெளியிட்டுள்ளார்கள். இதனால் தனியார் துறையினர் சுற்றுலாத்துறையில் அதிக அளவில் பங்கேற்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையம், கோவை கொடீசியா, மதுரை மடீசியா ஆகிய இடங்களில் நடைபெறும் வர்த்தக கண்காட்சிகள் மிகப்பெரிய அளவில் (MICE) வர்த்தகச் சுற்றுலாவிற்கு வாய்ப்பாக அமைந்துள்ளன. தமிழ்நாடு சுற்றுலாத்துறை உலக சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் தனியாருடன் இணைந்து பட்டம் விடும் திருவிழா, பலூன் திருவிழாக்களை நடத்தி வருகின்றது. பொள்ளாச்சி பலூன் திருவிழா ஒன்றிரண்டு வெப்பக்காற்று பலூன்களுடன் ஆரம்பித்து தற்போது பல வெளிநாடுகளைச் சேர்ந்த 15 க்கும் மேற்பட்ட பலூன்கள் பங்கேற்புடன் நடைபெற்று வருகின்றது.

வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் எளிதில் தமிழ்நாட்டில் சுற்றுலா மேற்கொள்ள சென்னை, திருச்சி, கோவை, மதுரை ஆகிய நான்கு சர்வதேச விமான நிலையங்களைக் கொண்டுள்ளோம். மதுரை விமான நிலையம் விரைவில் 24 மணி நேரமும் இயங்க உள்ளது வெளிநாட்டு விமானங்கள் அதிக அளவில் வருகை தர வாய்ப்பாக அமையும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குறித்து தெரிவித்ததாவது,

முத்தமிழறிஞர் அவர்களால் சுற்றுலா வளர்ச்சிக்காக 1971ல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 26 ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. முதலமைச்சர் அவர்கள் ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களுக்கு அமுதகம் என்று பெயர் சூட்டி உணவகங்கள் சுற்றுலா பயணிகளுக்கு எளிதில் அடையாளம் காணச் செய்துள்ளார்கள்.

மேலும் நீங்காத அனுபவங்களை தரும் வகையில் 9 படகு குழாம்கள் மூலம் சுற்றுலா பயணிகளுக்கு படகு சவாரி மேற்கொள்ள சேவை அளித்து வருகின்றது. 3 தொலைநோக்கி இல்லங்களையும் செயல்படுத்தி வருகின்றது. மேலும் 5 வால்வோ சொகுசு போருந்துகள், 6 அதிநவீன சொகுசு பேருந்துகள், 3 சிறிய ரக சொகுசு பேருந்துகள் என 14 பேருந்துகள் மூலமாக புகழ்பெற்ற திருப்பதி சுற்றுலா, மாமல்புரம் சுற்றுலா, வெளி மாநில சுற்றுலா பயணிகளின் விருப்பமான 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா உள்ளிட்ட 52 வகையான சுற்றுலா பயணத்திட்டங்களை செயல்படுத்தி குறைந்த செலவில் பொது மக்கள் சுற்றுலா பயணம் மேற்கொள்ள சேவையாற்றி வருகின்றது என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேசுகையில், முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள சுற்றுலா கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் அதிக அளவில் சுற்றுலாத் திட்டங்களை செயல்படுத்தி வெளிநாட்டு மற்றும் வெளிமாநில சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிக்கச் செய்யும் பணிகளை மேற்கொள்வோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் என்ற லட்சிய இலக்கினை அடைய, சுற்றுலாத்துறையின் பங்களிப்பு முதன்மையாக இருக்கும் வகையில் பணியாற்றிடுவோம் என்று சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுலா பங்குதாரர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை துணைச் செயலாளர் வீருசாமி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ச.கவிதா, சுற்றுலாத்துறை இணை இயக்குநர் ப.புஷ்பராஜ் உள்பட சுற்றுலாத்துறை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிகு மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் திராவிடமாடல் ஆட்சி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் இளைஞர் நலன் சார்ந்த திட்டங்கள் மீது ஈர்ப்பு கொண்டு அன்னவாசல் தெற்கு ஒன்றியம் பரம்பூர் ஊராட்சியை சேர்ந்த ஜெயராஜ் தலைமையில் மாற்றுக் கட்சிகளில் இருந்து விலகி 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ் ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் அன்னவாசல் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் கே.எஸ்.சந்திரன் ஏற்பாட்டில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் பொதுக்குழு உறுப்பினர் எம்.செந்தில் குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.எஸ்.ச. இளைய சூரியன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.